T-UN-496

அருள்மிகு

ஸ்ரீ. வடபத்ரகாளியம்மன் திருக்கோயில்

மேல அலங்கம், தஞ்சாவூர்.

மாதர் நற்பணி மன்றம்

கூட்டு வழிபாடு

விலை ரூ. 1.

வடபத்ர காளியம்மன் கோவில்
மாதர் நற்பணிமன்றம் வெளியிடும்
இந்நூலை
வாழ்த்துகின்றோம்.

நம்பிக்கை கைராசி நாணயம்
சிறந்த ஸ்தாபனம்

ஸ்ரீ ஜெயலெக்ஷ்மி
ஜூவல்லரி

பவுன், நகைகள் வியாபாரம்,
2214, காசுக்கடைத்தெரு,
தஞ்சாவூர் - 9.

உரிமையாளர் M. முருகன்

M. M. சீல் உத்திரவாதமுள்ளது.

அச்சிட்டோர் :- வேலன் பிரிண்டர்ஸ் தஞ்சை.

பாடல்	வரி	பிழை	திருத்தம்
3	5	கல்யாண நபியே	கல்யாண ரூபியே
3	34	மங்கள நபியே	மங்கள ரூபியே
„	43	இராஜ்ஸ்வரியய	இராஜேஸ்வரியே
„	47	மாதங்களும்	மாதவங்களும்
„	7	சங்கரன் நாவி	சங்கரன் நாபீ
„	80	காஞ்சி	கொஞ்சி
4	13	கோரநபினி	கோரரூபினி

நன்றி

இப்புத்தகத்திற்கு விளம்பரங்கள் தந்து உதவிய வர்த்தகர்களுக்கும், வாங்கி தந்து உதவிய திரு. **அம்பாசங்கர்** அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த **நன்றியைத்** தெரிவித்துக்கொள்கிறோம்.

மாதர் நற்பணி மன்றம் சார்பாக
செயலாளர்: மீனாக்ஷி சுந்தரேசர் ஸ்ரீ வடபத்ர
காளியம்மன் **கோவில்**, மேல அலங்கம் **தஞ்சாவூர்.**

தலைவர் :- ராஜம்மாள் W/o (Late) வெங்கடாஜலம்
காளிகோவில் சந்து, தஞ்சாவூர்.

உபதலைவர் :- திருமதி சகுந்தலா சுந்தர்ராஜ்,
கண்டிதாசா சந்து, தஞ்சாவூர்.

Phone : 636 P. P

ஏஜண்ட் :

A. பஷீர் & சன்ஸ்

2528 அய்யங்கடைத் தெரு,

தஞ்சாவூர்.

வெள்ளை வெளிர் சலவைக்கு
சூப்பர் பொன்வண்டு சோப்
வாங்கி உபயோகியுங்கள்
பொன்வண்டு சோப்

வாடிக்கையாளர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி
சூப்பர் பொன்வண்டு சோப் மீண்டும் 1 ரூ,
விலைக்கே கிடைக்கிறது

கியாரண்டியுள்ள பவுன் நகைகள், கல் நகைகள்
வெள்ளிப்பாத்திரங்கள் கிடைக்குமிடம்.

1049

நா. தங்கவேல் செட்டியார் சன்ஸ்

பவுன் நகை வியாபாரம்

காசுக்கடைத்தெரு, தஞ்சாவூர்

மக்களை காத்திடும் எல்லைக் காளி

காவேரிநதி பாயும் சோழவள நாட்டின் தலைநகரமான தஞ்சை - நாட்டியம், சங்கீதம் முதலிய கலைகளை தமிழகத்திற்கு பரப்பியதும், பல கலைஞர்களை உருவாக்கியதுமான தஞ்சை மாநகர் - கலையம்சம் கொண்ட பல அழகிய கோவில்களை கொண்டது. நகருக்கே அழகு சேர்க்கும் பெரியகோவிலும், பங்காரு காமாக்ஷியம்மன் கோவிலும் விசேஷமானவை. மேலவீதியில் கருணைதேவியாய் காமாக்ஷியம்மன் அருள் பாலிக்கிறாள் என்றால், மேல அலங்கத்தில் ஸ்ரீ வடபத்ரகாளியம்மன் வீராவேசத்துடன் எல்லைக்காளியாய் நின்று மக்களை காக்கிறாள். இந்த சிறிய கோவிலின் வலப்புறம் முருகன் கோவிலும், பின்புறம் முருகாஸ் உள்ளது. இந்த சிறிய விநாயகர், பாலவிநாயகர்ரமும் என்ற பெயருடன் சக்தியுள்ள விநாயகராக விளங்குகிறார். காளிதேவி எட்டு கரங்களுடன் அழகிய வடிவமாக விளங்குகிறாள். இந்த வட்டாரத்தில் மிகவும் சக்தி வாய்ந்த தெய்வமாக நம்பப்படுகிறாள் மிகவும் சிதிலமடைந்திருந்த இக்கோவில் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட மாதர் நற்பணி மன்றத்தினரால் திருப்பணிகள் செய்யப்பட்டு வருகிறது ஒவ்வொரு ஆண்டும் நவராத்திரி லக்ஷார்ச்சனை விழா அர்ச்சகர் முயற்ச்சியாலும் பக்தர்கள் ஆதரவினாலும் சிறப்பாக நடத்தப்படுகிறது. மார்கழியில் தனுர்மாத பூஜை இந்த பகுதி இளைஞர்களால் விசேஷமாக நடத்தபடுகிறது.

சித்திரை மாதத்தில் ஏழை மக்களுக்கு கஞ்சிகாய்ச்சி ஊற்றும் திருவிழா நமது உபதலைவர் திருமதி சகுந்தலா சுந்தர்ராஜ் அவர்களால் ஆண்டுதோறும் செய்யப்படுகிறது இவை தவிர மாதந்தோறும் நடை.பெறும் பௌர்ணமி பூஜையில் நூற்றுக்கணக்கான மாதர்கள் கலந்து கொண்டு சிறப்பித்து வருகிறார்கள். பௌர்ணமி பூஜையில் பங்கு கொண்டவர்கள் எண்ணியது நிறைவேறியுள்ளது என்பது கண்கண்ட உண்மையாகும். வேலையில்லாதவர்களுக்கு வேலை கிடைத்திருப்பதும், திருமணம் தடைபட்டவர்களுக்கு திருமணமானதும் நேரில் கண்ட உண்மை. இத்தகைய பெருமைகள் வாய்ந்த ஸ்ரீ வடபத்ரகாளியம்மன் சன்னதியிலே, இப்புத்தகத்திலுள்ள காளி ஸ்தோத்திரங்களை கூறிவணங்கி வந்தால், எல்லா சங்கடங்களிலிருந்தும் விடுபட்டு நன்மையடைவார்களென்பது உறுதி.

வடபத்ர காளியம்மன் கோவில்
மாதர் நற்பணிமன்றம் வெளியிடும்
இந்நூலை
வாழ்த்துகின்றோம்.

உ

முருகன் துணை

சுயம்பு
ஓம் சக்திஜுவல்லரி

காசுக்கடைத்தெரு, தஞ்சாவூர்.

Prop :- G. பத்மநாபன்.

பவுன் கவரிங் நகைகள், வெள்ளி கொலுசுகள்
ஆர்டரின் பேரில், பவுன் நகைகள்
கியாரண்டியுடன் செய்து தரப்படும்.

Sri Chandramouleeswaraya Namaha

SRI SANKARA BHAGAVADPADACHARYA

PARAMPARAGATHA

His Holiness

Sri Kanchi Kamakoti Peetadhipathi

Jagadguru Sri Sankaracharya Swamigal

SRIMATAM : : SAMASTHANAM.

KANCHEEPURAM - 631 502.

Camp : Varanasi Date : 17-4-86

இப்பவும் தஞ்சாவூர் ஸ்ரீ வடபத்ர காளியம்மன் கோவில் மாதர் நற்பணி மன்றத்தில் காளியம்மன் மீது ஸ்தோத்ர பாடல் வெளியிடுவது கேட்டு சந்தோஷிக்கிறோம்: இந்த நல்நூலை ஒவ்வொருவரும் படித்து ஸ்ரீ காளியம்மன் அருளுக்கு பாத்திரர்களாகும்படி ஆசீர்வதிக்கின்றோம்.

- நாராயணஸ்மிருதி.

அருள்மிகு வடபத்ர காளியம்மன் திருக்கோவில்

மேல அலங்கம், தஞ்சாவூர்.

மாதர் நற்பணிமன்றம் கூட்டு வழிபாடு.

மங்களே மங்களாதாரே மாங்கல்யே மங்களப்ரதே
மங்களார்த்தம் மங்களேசி மாங்கல்யம் தேஹிமேஸதா
(நாரத முனிவரால் சாவித்ரிதேவிக்கு உபதேசிக்கபெற்ற இந்த மந்திரத்தை தினமும் 21 முறைகள் அம்பாள் சன்னதியில் கூறி வணங்கி வந்தால், சுமங்கலிகள் மாங்கல்ய பலம் பெறுவார்கள். கன்னிப் பெண்கள் நல்ல கணவனை அடைவார்கள்,)

பிரதிகள் கிடைக்குமிடம் :-

ஜோதிடக் கலைஞர், மீனாக்ஷி சுந்தரேசன்

1516, பச்சண்ணாசந்து, தஞ்சாவூர்.

மாதந்தோறும் நடைபெறும் பௌர்ணமி பூஜையில் பங்கேற்கவும் அன்னையின் திருவருளை பெறவும்.

போன் : 646

தரமான வெண்ணெய், நெய் & எண்ணெய்
வாங்க சிறந்த இடம்

ஸ்ரீ மீனா நெய் ஸ்டோர்

2346, அய்யங்கடைத் தெரு,
தஞ்சாவூர் - 613 009.

திருமணம் மற்றும் வைபவங்களுக்கு தயிர்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
கிடைக்கும்.

முன்னுரை

புலவர்மாமணி

வீ. தமிழ்ச்சேரனார், அம்மாப்பேட்டை.

சக்தி வழிபாடு, தொன்மையான வழிபாடு ஆகும். காலம் கடந்த மஹாசக்தி காளி. காளியின் கருணை, மறக்கருணை ஆகும். தாய் பிள்ளைக்கு மருந்தூட்டும் பொழுது பிள்ளையின் கால் கைகளை பிடித்து அமுக்கிக்கொண்டு மருந்து ஊற்றுவார்கள். இதற்காகத் தாயை யாரும் தூற்றுவதில்லை. போற்றுவார்கள். உலகில் தீமை விஞ்சிய போது, சக்தி இயற்றும் கூத்து ஆகும். பகைவர்களுக்கும் காளி மறக்கருணைபுரிந்து நல்லருள் பாலிப்பாள். தஞ்சை மேல அலங்கத்தில் உள்ள, ஸ்ரீ வடபத்ரகாளியின் மீது, துதிப்பாடல்கள் அடங்கிய நூல் ஒன்று வெளியாகிறது. திருமதி மீனாட்சி சுந்தரேசன் அவர்கள் இந்த அரியபணியைச் செய்திருக்கின்றார்கள், தொண்டில் ஆர்வமும், மிகுந்தபக்தி நலமும் கொண்ட மீனாட்சி சுந்தரேசன் அவர்கள் முந்தி இருந்த பாடல்களை எல்லாம் எடுத்துத் தொகுத்து தானும் இரண்டு பாடல்களை இயற்றி இணைத்து வெளியிட்டுள்ளார்கள்.

தஞ்சையில் ஸ்ரீ வடபத்ரகாளியம்மன் மாதர் நற்பணி மன்றத்தின், தெய்வத்தொண்டு போற்றுதற்குரியது சீலமும் ஆச்சாரமும் மிகுந்த ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசன் அவர்கள் வெளிப்படுத்தியுள்ள, நூல் ஓர் ஞானநூல். இது பிள்ளைகட்கும், பெரியோர்கட்கும், ஸ்ரீ காளியம்மன் திருவருளைப் பெற உதவி செய்யும் இல்லறம் போற்றும் பெண்டிர்களுக்கு, ஓர் இனிய வரப்பிரசாதம் ஆகும். நூல் வளமாக உள்ளது. படிப்போர் நலம் எய்துவார்கள்.

யாவரும் படித்துப் பயன்பெறவேண்டும்.

அம்மாப்பேட்டை. புலவர்மாமணி

11-5-86. வீ. தமிழ்ச்சேரனார்.

சகல பயம் - மனோவ்யாகூலம் நீங்க

ஓம் சரணாகத தீனார்த்த பரித்ராண பராயனே
சர்வஸ்யார்த்தி ஹரேதேவி நாராயணி நமோஸ்துதே
ஜ்வாலாகராளம் அத்யுக்ரம் அசேஷாஸுர
ஸூதனம்
த்ரிசூலம் பாதுநோபீதே பத்ரகாளி நமோஸ்துதே

சத்ரு பயம் விலக

ஓம் பத்ரகாளி நமஸ்தேஸ்து பத்ர பாஸுர
பூஷணே
விநாசயாசமே சத்ருன்பித்வா குலேன வக்ஷஸி.

நம்பிக்கை, நாணயம், கைராசி
மூன்று தலைமுறை கடை

R. G. ஜுவெல்லரி

951, காசுக்கடைத்தெரு, தஞ்சாவூர்.

சுவையும், மணமும் மிகுந்த காப்பிக்கும்
ருசிமிக்க தரமான சிற்றுண்டிக்கும்
தஞ்சையில் புகழ்பெற்று விளங்குவது

காசி போலஸ்

காசுக்கடைத்தெரு, தஞ்சாவூர் - 9.

பாடல் 1.

ஐகிரி நந்தினி மெட்டு -

பூரணி காரணி தாயான நாரணி
ஆரணி சூலினி வாராகி மோகினி
பூரண யோகினி பாலா புராதனி - பத்ரகாளி

போதகதாயினி தேஜோ விலாசனி
மாலினி காமினி மாதா மனோன்மணி
பூரண மாகலை வாணி மனோகரி - ஜெய காளி

வாரிஜமேனி கொள் தேஜோஸ்வ நபிணி
நாரணன் நான்முகனே பேணு தாளினி
மாயா மதாயுல கிரேபூ மேமநள் - ஓம் காளி

மாமதுரை வாசினி மாதா மீனலோசனி
நீலிசுவாசினி மநநாள் தாயினி
மாமலர் வாஸினி மரகத நபிணி - வடபத்ரகாளி

சாரதை சாமலரி மீனாள் பராபரை
பார்வதி கோமதி மகமாயி கோமலரி
சாதன வீடநள் மாதா மகேஸ்வரி - மகா காளி

காசி நிவாஸினி தேவி அன்னபூரணி
மாகருணாகரி லோகோபகாரி நீ
தஞ்சைநகர் வாஸினி, காத்தநள் நீ - வடபத்ர காளி

பாடல் 2

தஞ்சை நகர் காக்கும் தயாபரியே பத்ரகாளி தாயே
தருமம் தழைக்க செய்யவே தரணியில் வந்தாள்
பத்ரகாளி தாயே

தாமதம் செய்யாதே தாயென வந்தாள் ,,
பாசாங்குசதாரியே பாபங்கள் போக்குவிப்பாய் ,,
யோகநிலை கொண்ட ஞானஒளி வடிவானவளே ,,
சோகங்கள் போக்கி ரோகங்கள் தீர்த்தருள்வாய் ,,

நம்பியோரை காத்து நன்மைகள் செய்வாய் ,,
எட்டுகரம் கொண்டே துஷ்டர்களை அழித்த ,,
அருள்கரம் நீட்டியே அன்பர்களை பரிபாலிக்கும் ,,
வேடமாய் வந்து விரும்பியதை தந்தருள்வாய் ,,

கற்பூர ஒளியிலே கருணை வடிவாய் நின்ற காமாக்ஷியும் நீயே
அருள்பார்வை வீசியே அகிலமும் காக்கவந்த அங்கயற்ங்
கண்ணியும் நீயே.
வேதங்கள் போற்றும் விரும்பியதை தரும் விசாலாக்ஷியும்
நீயே

அண்டசராசரங்களையும் அரவணைக்க வந்த
அன்னபூரணியும் நீயே
மாயங்கள் நீக்கி போகங்கள் தரும் மாரியம்மனும் நீயே
மானிடரெல்லாம் தேடிவரும் மகாகாளியும் நீயே
எங்கேயும் நீயே எல்லாமும் நீயே எப்போதும் நீயே
பத்ரகாளி தாயே.

உ-வது பாடல் இயற்றியவர்.
ஜோதிடக்கலைஞர் திருமதி. மீனாக்ஷி சுந்தரேசன்.

பாடல் 3

பேர் நாமம் கொண்டு உயர்ந்திருக்கும், ஊரை சுமக்கும்
பரஞ்சோதி - தன்னுமம் கொண்டு தழைத்திடவே செய்த
தாயே உனக்கு நமஸ்காரம்
கல்கத்தா என்ற சொல்லால் கலக்கம் போக்குவாய்
காளிகா தேவியே கல்யாண நபியே உனக்கு நமஸ்காரம்
கங்கை கரையில் உறைபவளே மங்கள ஜோதி நமஸ்காரம்
சங்கரன் நாவில் அவதரித்த சியாமளியே நமஸ்காரம்
வேதம் புகழ்ந்திடும் சாரதையே சரஸ்வதியே நமஸ்காரம்
வித்தையளிக்கும் விநாயகியே சக்திக்காலயே நமஸ்காரம்
லக்ஷ்யங்களை நிறைவேற்றி வைக்கும் லக்ஷ்மிதேவியே
நமஸ்காரம்

நாமத்தாலே நகரை சுமந்த நாராயணிக்கு நமஸ்காரம்
பாதத்தை தந்து பவித்ரமதாக்கிய பாலே உனக்கு
நமஸ்காரம்
ஸ்யாமசுந்தரி சுகுமாரி சௌந்தர்யவதி சம்பத்ப்ரதே ,,
தருணி கன்னி பாலாதேவி தாடகே நமஸ்காரம்
கருணாபூர்ண விழியழகி கௌரி சங்கரி மீனாக்ஷி - கோமள
ளாங்க சுந்தரி கோட்ய துர்கே நமஸ்காரம்.
உப நிஷத்து உட்பொருளே உத்தமியே நமஸ்காரம்
ஓங்கார பஞ்சகி உமாதேவி நமஸ்காரம்
ஸ்ரீபுரவாசியே ஸ்ரீ லலிதே காமேச்வாமத்தமர்ந்தவளே
கண்ணாட்டி த்ரிபுரேஸ்வரியே சுமணி காந்தாமணியே
சுபகரி சுபபாஷிணியே, மதுர மனோன்மணியே
பத்மாக்ஷி பரிபூரண நாயகி பாகீரதி நமஸ்காரம்
நித்யானந்த நிரஞ்சனியே நிஜசரணப்ரகாசினியே - மதன
மோகினி மாம்பாஹி - மாமவசங்கரி மாம்பாஹி
தர்மசம்வர்த்தனியே மாம்பாஹி தாக்ஷாயணி நமஸ்காரம்
சுந்தரிதேவியே நெல்வேலி போற்றிடும் நிர்மலரூபி பதம்
பணிந்தேன்
குஞ்சிதபாத குமரிநீயே ரஞ்சித சுகிர்ந்த சுந்தரியே - கெஞ்சு
கிறேன் உன்பாதம் கோடி நமஸ்காரம் கோமதி தேவி
நமஸ்காரம்
சங்கரநாராயணன் மகிழும் சாம்பவி சந்த்ரமௌளீஸ்வரி
திருங்கசிரிவாழும் மங்கள நபியே ஜெகன்மாதா நமஸ்காரம்
ஆவுடை அன்னையை தேடுகிறேன் பாதமலர் தூவி
பாடுகிறேன் ஆடுகிறேன் அகண்ட ஸ்வரூபியே வாகீஸ்வரி
நமஸ்காரம்
வடவாசல் செல்வியே நீயே முல்லை வன பகவதியே
செங்கண்ணூர் திருபூத்த ஸ்ரீதேவி நமஸ்காரம்
ஆலவாய் அமர்ந்திருக்கும் அகிலாண்ட நாயகியே சாலவே
தொழுது நின்றேன் சாரதையே நமஸ்காரம்
சக்திவாகீஸ்வரி சாமளா தேவியே காளி நீயே நமஸ்காரம்.
ஆலம்பாறை ராஜேஸ்வரியய ஹேமாம்பிகா நாயகியே
கடல்கரை கன்யாகுமரி கனிமொழியும் முகத்தவளே

பக்ஷமாய் பக்தரைக் காத்து நிற்கும் காளிஸ்வரூபிணி
நமஸ்காரம்

மரக்கலங்களும் வந்து நிற்க மாதங்களும் ஓங்கி நிற்க
மங்களவசனம் எங்கிலும் கோஷிக்க மகாகாளி நமஸ்காரம்
பூத்து குலுங்கிடும் நகர்தன்னிலே புவனேஸ்வரியாய்
விளங்கும்

காத்து ரக்ஷிக்கும் காளிகையே காரணியே நமஸ்காரம்
செல்வம் பழித்த பதியினிலே சீர்பெரும் கங்கைகரை
தனிலே

மங்களம் பொங்கிட வாழும் பரதேவி மகாகாளி நமஸ்காரம்
அன்னவஸ்திரம் தந்து காப்பவளே அம்மா உனக்கு
நமஸ்காரம்

ஸ்வர்ணமணிகள் நல்முத்துகளும் சொரியும் தேவி
நமஸ்காரம்

நாடுசெழிக்க நலம் புரிந்த நாயகியே நமஸ்காரம்
பாடவைத்த பரஞ்சோதி பார்வதியே நமஸ்காரம்
மந்திர தந்திரயந்திரங்களும் வாகனதீபாலங்காரங்களும்
தாராளமாய் தந்த தயாபரிதாயே உனக்கு நமஸ்காரம்
மாடமாளிகையே மந்திரங்கள்கூட கோபுரம் தானிறந்த
சேடனும் உரைக்கொண்ணாத சீர்பெரும் தேவியே
நமஸ்காரம்

சாதுக்கள் வாழ்ந்த இடமிதுவே சந்நுக்கள் வாழ்ந்து
ஸ்தலமிதுவே

சித்தம் தெளிந்து நிலை இதுவே சீரடி போற்றி நமஸ்காரம்
யாகங்கள் யோகங்கள் செய்யும் ஸ்தலம் - பாகம் அடைந்து
பெருகும் ஸ்தலம் - ஆகமங்கள் நிறைந்த ஸ்தலம் -
அன்னை மகாகாளி அமர்ந்த ஸ்தலம்
பூசுரர் பஜனை செய்யும் ஸ்தலம் - புத்தி குலைவிலா
கங்கை ஸ்தலம்

சக்திசாமுண்டி சகஸ்கராதேவி சாதுராம கிருஷ்ணர்
வாழ்ந்த ஸ்தலம்

துவாதச லிங்கமும் கங்கையும் தேவியும் சாது மடங்களும்
உள்ள ஸ்தலம் - சோதனை அகற்றி ஸ்துதி பெருகச்செய்யும்
சுத்தபரா சக்தி வாழும் ஸ்தலம்.

குஞ்சிதபாதம் குழைந்திடவே சஞ்சிதகர்மம் தொலைந்திடவே
வஞ்சனை தீர்த்தென்னை ரக்ஷைசெய்த வாக்தேவி நமஸ்காரம்
காஞ்சி விளையாடிவந்த ரஞ்சித சூடாமணியே - அஞ்சு
கோசம் அறவொழித்த அருள்திருவே நமஸ்காரம்
குற்ருலம் உறைபவளே குழல்வாய்மணி தேவியரே
குற்றங்கள் பொறுத்தருளும் குணநிதியே நமஸ்காரம்
தென்காசி தேவியரே உலகநாயகி அன்னையரே - கடை
யம்தன்னில் நிறைந்துநின்ற கல்யாணிதேவியே நமஸ்காரம்
வாசரமகோசரியே வைகுண்டநாயகியே அலர்மேல்
மங்கையரே ஆனந்தரூபி- நமஸ்காரம்
உஜ்ஜனிமகாகாளியரே ஊரடியில் நிலைத்தவளே
உலகைகாத்து ரக்ஷைசெய்யும் ஓங்காரி நமஸ்காரம்
கொடுங்கல்லூர் பகவதியே குற்றம் குறை தீர்ப்பவளே
வாடிவதங்கும் மக்களுக்கு வரமளிப்பாள் நமஸ்காரம்
சேற்றில் புழுத்தவளே சேர்த்தலையில் வாழ்பவளே
சித்தம் தெளியவைக்கும் சித்ரூபி நமஸ்காரம்
கனகாம்பரநாயகியே கல்யாணிதாயகியே
நீசஜாதி பூஜைசெய்யும் நிர்மலையே நமஸ்காரம்
ஒப்புயர்வற்றவளே ஓடும் நதிக்கரை வாழ்பவளே
பண்டாரக்கள் பூஜைசெய்யும் பத்ரகாளி நமஸ்காரம்
ஏகாந்தநாயகியே ஹ்ருதயப்ரதாயகியே ஜனனமரணமற்ற
பூமி செழித்த விநாயகியே
எங்கெங்குமாய் நிறைந்த ஏகசக்ரபதியே - கல்கத்தாநகரம்
தன்னிலே காக்ஷி தந்தாய் நமஸ்காரம்
கோடி ஜனங்கள் கும்பிடவே க்ஷேமளேஸ்வரியாய்
விளங்கும்
தாளமேள தவுல்கள் கோஷிக்க தாயேகாளி நமஸ்காரம்
பஜனை கீதங்கள் பாடிடுவார் நாமபாராயணம் செய்திடுவார்
வசனமாய் இருந்து மக்கள் வரங்கள் பெற்று மனம் மகிழ்வார்
நர்த்தனங்கள் செய்திடுவார் புஷ்பகுவியல் போட்டிடுவார்
அக்ஷதைகள் தூவிடுவார் அம்மா காளி நமஸ்காரம்
அன்னைமகாலெக்ஷ்மி பாதந்தன்னில் அடிபணிந்து நாம்
போற்றிடுவோம்.

ஆதரவித்து அணைத்து அருள்செய்யும் ஆர்யதேவியே
வாழ்த்திடுவாய்
குளறும்வாயில் வந்த கவிதையில் குற்றம் குறை நிறைந்
திருக்கும்
குணத்தை எடுத்து குற்றத்தை விடுத்து கோதை எனக்காசி
செய்திடுவீர்
மாபெரியோர் எல்லோருக்கும் வணங்கிபாதம் நான்
பணிந்தேன்.
இணங்கி ஸ்ரீ குருபாதமலர் தன்னில் இந்த ஸ்துதியை
சமர்ப்பித்தேன்
தஞ்சையை காக்கவந்த தாயே வடபத்ரகாளியம்மா
தஞ்சமென்று உன்பாதம் பணிந்தோம் கோடி நமஸ்காரம்

❋❋❋❋

பாடல் 4

ஓம் சக்தி

இயற்றியவர்: ஜோதிடக்கலைஞர் திருமதி மீனாக்ஷி சுந்தரேசன்

ஓம் சிவசக்திசொரூபிணியே; ஸ்ரீ வடபத்ரகாளி போற்றி
அகிலாண்டகோடி ப்ர்ம்மாண்டநாயகி ஸ்ரீவடபத்ரகாளி ,,
அண்டமெல்லாம் காத்திடுவாள், வடபத்ரகாளி போற்றி
அன்பர்களுக்கு அருள் பொழிவாள்
பாபிகளுக்கு பயங்கரியானாள், வடபத்ரகாளி போற்றி
அம்மா, அம்மா என்றுஉருகி அழைத்தபோதை
அரவணைப்பாள் வடபத்ரகாளி போற்றி
எட்டுகரம் கொண்டு, நம்மை காத்திட
ஓடிவருவாள் வடபத்ரகாளி போற்றி
கருணைகடலே, காருண்யதேவியே, வடபத்ரகாளி போற்றி
எங்கும் நிறைந்தாள், எல்லாம்தருவாள் வடபத்ரகாளி ,,
பக்தர்களுக்கு பரவசம்தருவாள், மற்றவர்களுக்கு
கோரதபினியாவாள், வடபத்ரகாளி போற்றி

வறுமையை துடைப்பாள், வாழ்வை கொடுப்பாள்
வடபத்ரகாளி போற்றி
பொறுமையை கொடுப்பாள், பொய்மையை அழிப்பாள்
வடபத்ரகாளி போற்றி
துதிப்போருக்கு அபயகரம் நீட்டுவாள், வடபத்ரகாளி ,,
வித்யாதேவியாய்வந்து வித்தைகளை தருவாள்
வடபத்ரகாளி போற்றி
திருமகளாய் தோன்றி தனங்களை தந்தருள்வாள்
வடபத்ரகாளி போற்றி
பராசக்தியாய் வந்து பக்தர்களை காப்பாள் வடபத்ரகாளி ,,
அசுரர்களை அழித்த துர்க்கையும் நீயே வடபத்ரகாளி ,,
நம்பியோரை காத்த முத்துமாரியும் நீயே வடபத்ரகாளி ,,
தஞ்சம் என்று வந்தோருக்கு தரிசனம் தருவாள்
தஞ்சையில் உறைவாள் வடபத்ரகாளி போற்றி
புவனமெல்லாம் காக்கும் புவனேஸ்வரி தாயே வடபத்ரகாளி
போற்றி
அவனியில் ஆட்சிசெய்யவந்த ஆதிபராசக்தியே
வடபத்ரகாளிதாயே போற்றி
ஓங்காரி, திரிசூலினியாய் வந்தாள், நல்லோர் நெஞ்சிலே
நிறைந்தாள் வடபத்ரகாளி போற்றி
அபிராமி, மகேசுவரி, கௌமாரி, நாராயணி, வாராகி
ருத்ராணி மகாகாளியென்னும் சப்தமாதர்க்களும் நீயே
வடபத்ரகாளி போற்றி
வெள்ளிக்கிழமை ராகு காலத்தில் துதிப்போருக்கு
வேண்டும்வரம் தருவாள், வடபத்ரகாளி போற்றி
மங்கள்வாரத்தில் மனமகிழ்ந்து வணங்கிய பேர்களுக்கு
எல்லாமங்களமும் தருவாள் வடபத்ரகாளி போற்றி
பௌர்ணமி நாளில் பக்தியுடன் பூசித்தோர்க்கு பாக்கியங்
களருவாள் வடபத்ரகாளி போற்றி
நித்தமும் உன்னை நினைத்தோர், நலம் அத்தனையும்
பெற்று வாழ நாயகி நீ
அருள்வாய் வடபத்ரகாளி போற்றி

ஸ்ரீ காளியம்மன் அருள்மாலை

கந்தவீர மாகாளி கமலமங்கலை
    கருணையான வடிவமாகி களித்து நின்றனை
வித்தையாகி விளக்குமாகி விளங்கி வந்தனை
    விண்ணுமாகி மண்ணுமாகி வெற்றி கண்டனை
மந்திரமான புத்தியோட்டி மனமும் தந்தனை
    மலரின் மேவுதன் உன்னை பாட மயக்கம் தீர்த்தனை
சொந்தமான காளியம்மா இந்தநாள் முதல்
    எந்தனோடு வாழ்வளிக்க என்றும் தங்குவாய்
நந்தவீர மாகாளி நயனமாலினி
    நம்பிவந்த எம்மிடையே நலமும் காட்டுவாய்
இந்தவாழ்வில் உன்னையன்றி இங்கு யாருளார்
    இன்றுநல்ல காலவந்து இனிமை கூட்டுவாய்
மந்தையாடு போல வாழ்வில் மயங்கி நில்லாமல்
    முக்தியோடு செல்வபோகம் முழுவதும் நாட்டுவாய்
சொந்தமான காளியம்மா இந்தநாள் முதல்
    எந்தனோடு வாழ்வளிக்க என்றும் தங்குவாய்
பொங்குவீரமாகாளி பொய்மை தீர்மணி
    பொறுமையோடு பெருமையாகிப் போருநங்கூட்டினாய்
எந்தையான சிவனைத்தூது எடுத்து அனுப்பினாய்
    எழிலுமாகி எண்ணமாகி என்னுள் ஆடினாய்
பந்தமற்ற விரலிநீயும் பகைமை என்றதும்
    பாய்ந்துவந்து படைகளோட்டிப் பகைமை வாட்டினாய்
சொந்தமான காளியம்மா இந்தநாள் முதல்
    எந்தனோடு வாழ்வளிக்க என்றும் தங்குவாய்
விந்தை வீரமாகாளி விரைந்து வந்திடின்
    தொற்றுநோயும் வந்தநோயும் தொலைவில் ஓடும்
எந்தமாயம் எம்மை தேடி வந்த போதிலும்
    என்னையீன்றதாய் நினைப்பில் எரிந்து போய் விடும்
சிந்தை வாழும் உந்தன் மஞ்சள் சிறிது பூசிடின்

கந்தனோடு கரியன் நீலகண்டன் காணலாம்
சொந்தமான காளியம்மா இந்தநாள் முதல்
எந்தனோடு வாழ்வளிக்க என்றும் தங்குவாய்
ஆதிசக்தி சோதிசக்தி ஆளவந்த சக்தியே
ஆகமங்கள் ஆனசக்தி ஆத்மஜோதி சக்தியே
நீதிசக்தி நித்யசக்தி நீறுபூசும் சக்தியே
நீலிசக்தி நிறத்தசக்தி நீலமேனி சக்தியே
காதிசக்தி கானசக்தி காணுமின்ப சக்தியே
காளிசக்தி காயசக்தி காட்சி தந்த சக்தியே
வீரசக்தி தீரசக்தி வீடுகாக்கும் சக்தியே
சூரசக்தி சூலிசக்தி சூழும் சக்தி சக்தியே

பாடல் 6

தஞ்சையிலே குடிபுகுந்த பத்ரகாளி (உந்தன்)
தரிசனமே தந்தருள்வாய் பத்ரகாளி
அன்பர்வலே நீக்கவேண்டும் பத்ரகாளி (உந்தன்)
அருளமுதை புகட்டவேண்டும் பத்ரகாளி
ஆதிபராசக்தியான பத்ரகாளி - என்னை
ஆட்கொள்ள வேண்டுமம்மா பத்ரகாளி
இகபரசுகம் அருளும் பத்ரகாளி (எந்தன்)
இன்னல்களை களைய வேண்டும் பத்ரகாளி
ஈஸ்வரியின் நாயகியே பத்ரகாளி (எனக்கு)
ஈடில்லாவாழ்வருள் பத்ரகாளி
உன்னையே நான் நம்பிவந்தேன் பத்ரகாளி (எந்தன்)
உள்ளமதில் குடிகொள்வாள் பத்ரகாளி
ஊழ்வினையை அறுப்பவளே பத்ரகாளி (எனக்கு)
ஊக்கமதை தந்தருள்வாய் பத்ரகாளி
எங்கெங்கும் நிறைந்தவளே பத்ரகாளி (இங்கு)
எங்கள் குறை தீர்த்துவைப்பாய் பத்ரகாளி
ஏறுமயில் வாகனனின் அன்னையே நீ (இந்த)
ஏழைக்கருள் புரிந்திடுவாய் பத்ரகாளி
ஐங்கரனின் அன்னையான பத்ரகாளி (எங்கள்)
ஐயமதை நீக்கிடுவாய் பத்ரகாளி

ஒளிசுடரின் போராளியே பத்ரகாளி (எனக்கு)
ஒளிமயமாய் வாழ்வருள் பத்ரகாளி
ஓம் சக்திதேவியே நீ பத்ரகாளி (இங்கு)
ஓடிவந்து காட்சி தருவாய் பத்ரகாளி
கலியுகயுகத்தின் தெய்வமான பத்ரகாளி (எந்தன்)
கவலைகளை போக்கிடுவாய் பத்ரகாளி
காலை மாலை வருகிறேன் உன்னை நாடி (உந்தன்)
கடைக்கண்ணால் பார்த்து அருள்வாய் பத்ரகாளி

பாடல் 7

(ஆதிசிவன் தாள்பணிந்து வணங்கிடுவோமே (மெட்டு)
வடபத்ரகாளி கோவிலுக்கு சென்றிடுவோமே
ஆதிபராசக்தி அருள்பெற்று வாழ்ந்திடுவோமே
மேலஅலங்கத்தில் கோவில்கொண்ட அன்னையல்லவா
அவளை அனுதினமும் வணங்கிடுவோருக்கு அருள்புரியும்
தாயல்லவா
அபிஷேகம், அலங்காரம் செய்துநாம் மகிழ்ந்திடுவோமே
அந்த அன்னையின் அருள்பெற்று வாழ்ந்திடுவோமே
(வடபத்ரகாளி)
ராகுகால காளிதேவியாய் காட்சிதரும் அன்னையல்லவா
நம்மை ராப்பகலாய் காத்துநிற்கும் தேவியல்லவா
குங்குமத்தில் காட்சிதரும் அன்னையல்லவா
நம்குங்குமத்தை காக்கும் சக்தி அவளல்லவா
(வடபத்ரகாளி)
பௌர்ணமி பூஜையை பக்தியுடன் செய்வோம்
அன்னை பத்ரகாளியின் முகம்கண்டு மகிழ்வோம்
பூர்ண நிலவிலே நம் அன்னை புன்னகை புரிவாளாம்
வாழ்வில் நிம்மதியைதந்து அன்னை அருள் பொழிவாளாம்
(வடபத்ரகாளி)

துதிபாடல் இயற்றியவர் : திருமதி சந்திரா மனோகரன்

போன் : 1363.

ஸ்ரீ வடிவேல் ஸ்டோர்ஸ்

ஜவுளி வியாபாரம்

2387, அய்யங்கடைத் தெரு

தஞ்சாவூர்.

எங்களிடம் விமல், கட்டாவ், அரவிந்த், காலிக்கோ
மற்றும் எல்லா மில்ஸ், சர்ட்டிங், சூட்டிங்,
சேலை ரகங்கள் கிடைக்கும்.

தங்கவேல் நெய் ஸ்டோர்

49-A. அய்யங்கடைத் தெரு.

தஞ்சாவூர்

எங்களிடம் தினசரி வரும் ஊத்துக்குளி &
கோயமுத்தூர் வெண்ணெ, நெய் மொத்தம் &
சில்லரை வியாபாரம்

ஸ்ரீ காமாட்சி ஜுவல்லரி

2467, காசுக்கடைத் தெரு

தஞ்சாவூர்-9

உரிமை :- S. கோவிந்தராஜன்.

எங்களிடம் வெள்ளி கொலுசு பவுன் கவரிங் நகைகள் கியாரண்டியுடன் கிடைக்கும்.

உரிமை :- S. கோவிந்தராஜன்

N B. :- எங்களிடம் ஆர்டரின் பேரில் 22 காரட் நகைகள் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

சித்ரா ஜுவல்லரி,

2467 காசுக்கடைத் தெரு,

தஞ்சாவூர் 9.

உரிமை :- N. ராமச்சந்திரன்.

எங்களிடம் வெள்ளி கொலுசு பவுன் கவரிங் நகைகள் கியாரண்டியுடன் கிடைக்கும்.

PHONE : 991 P.P.

N B. :- எங்களிடம் ஆர்டரின் பேரில் 22 காரட் நகைகள் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

22ct பவுன், வெள்ளி நகைகள்
வாங்க சிறந்த இடம்

நியூ மல்லிகா ஜுவல்லரி

2428, அய்யங்கடைத்தெரு, தஞ்சாவூர் - 9.

22ct தங்க கவரிங், வெள்ளி நகைகள்
வாங்க சிறந்த இடம்

மல்லிகா ஜென்சி ஜுவல்லர்ஸ்

2441, அய்யங்கடைத்தெரு, தஞ்சாவூர் - 9.

☎ 220, 1228, 614

A. O. சோமசுந்தரம் செட்டியார்

இரும்பு, வர்ண வியாபாரம்,

தஞ்சாவூர் - 9.

போன் : கடை 1263
வீடு : 1573

வாடிக்கையாளர்களுக்கும், நண்பர்களுக்கும்
எங்களது நல்வாழ்த்துக்கள்.

வெற்றிகரமாக எங்களது ஸ்தாபனம் **10** ஆண்டு நிறைவு விழாவினை நோக்கி வெற்றி பவனி வருகிறது

எங்களிடம் **திருமணம்** மற்றும் அனைத்து வைபவங்களுக்கும், தேவையான ஊத்துக்குளி புதிய **வெண்ணை நெய், வனஸ்பதி,** மற்றும் O. K. **ஆயில்,** மொத்தமாகவும். சில்லரையாகவும் நியாயமான விலையில் கிடைக்கும்.

ஏஜெண்ட் : M. V. S. வனஸ்பதி & ரீபைண்ட் ஆயில்.
நீங்களும் ஓர் முறை விஜயம் செய்யுங்கள்



ஸ்ரீ முருகன் நெய் ஸ்டோர்ஸ்

2343, அய்யங்கடைத்தெரு, தஞ்சாவூர்.

Prop : R. ராமையா.